# <u>தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்</u>

## <u>செய்தி வெளியீடு</u>

**எண்: 69** **நாள்: 25.08.2023**

**தமிழ்நாட்டில் நடைப்பெற்று வரும் வீட்டு மின் இணைப்பு மற்றும் பொது மின் இணைப்பு "சிறப்பு பெயர் மாற்றம் முகாம்" மேலும் 25.09.2023 வரை ஒரு மாத காலம் நீட்டிக்கப்படுகிறது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் அறிவிப்பு.**

தமிழ்நாட்டு மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு, மின் இணைப்புகளில் பெயர் மாற்றம் செய்யும் போது பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களை நீக்கிட, கட்டணம் செலுத்திய அன்றே பெயர் மாற்றம் வழங்கிட வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், தமிழ்நாடு முழுவதும் உள்ள வீட்டு மின் இணைப்பு மற்றும் பொது மின் இணைப்புதாரர்களுக்கென **"சிறப்பு பெயர் மாற்றம் முகாம்"**, கடந்த 24.07.2023 முதல் ஒரு மாதகாலம் வரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் சிறப்பான முறையில் நடைபெற்று வந்துள்ளது.

இந்த **"சிறப்பு பெயர் மாற்றம் முகாம்"** தொடங்கி வைக்கப்பட்ட நாள் முதல் இது வரை மொத்தம் **2,68,995** வீட்டு மின் இணைப்பு மற்றும் பொது மின் இணைப்பு மின் நுகர்வோர்கள் தங்களது மின் இணைப்புகளில் பெயர் மாற்றம் செய்து, பயன் அடைந்துள்ளனர்.

இச்சிறப்பு பெயர் மாற்றம் முகாம் குறித்து பொது மக்களிடையே கிடைக்கப்பெற்ற அதிகப்படியான வரவேற்பினை கருத்திற் கொண்டும், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட கால அவகாசம் 24.08.2023 அன்று முடிவடைவதாலும், இந்த "சிறப்பு பெயர் மாற்றம் முகாம்" மேலும் ஒரு மாத காலம் அதாவது **25.09.2023** வரை நீட்டிக்கப்படுகிறது.

வீட்டு மின் இணைப்பு மற்றும் பொது மின் இணைப்புக்கான பெயர் மாற்றம் தேவைப்படும் பொதுமக்கள் அனைவரும் இந்த கால நீட்டிப்பு அவகாசத்தை உரிய முறையில் பயன்படுத்தி, இச்சிறப்பு பெயர் மாற்றம் முகாம் மூலம் தங்களது வீட்டு மின் இணைப்புகள் மற்றும் பொது மின் இணைப்புகளில் பெயர் மாற்றம் செய்து கொள்ளுமாறு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர்/ம.தொ, த.ந.மி.உ.ம.ப.க, சென்னை –2.**